பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 12 வெள்ளிக்கிழமை (24-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 148

# கொம்படியில் குண்டு வெடிப்பு!

# 15பேர் வரை உடல் சிதறிபலி!!

## இருபது பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

கொம்படியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற பெரும் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் 15 அப்பாவிப் பொது மக்கள் உடல் சிதறிப் பலியானார்கள். இருபதுக்கும் அதிகமானோர் டுகாயமுற்றனர். மூன்று (கொட்டில்) கடைகள் நாசமாகின.

நேற்று நண்பகல் 12.30 மணிக்கும் 1.00 மணிக்கும் இடையில் கொம்படியில் [கண்டாவளைப் பக்கம்] உள்ள கடை ஒன்றில் வெடித்த சக்தி மிக்க குண்டு ஒன்றே பலத்த நாசத்தை உண்டுபண்ணியதாக அறியவந்தது.

கடும் வெயிலினால் பாதிப்புற்ற மக்கள் தாகம் தீர்ப்பதற்காக அக்கடை அமைந்திருந்த சூழலில் ஒதுங்கியிருந்தபோது இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

தேச விரோத சக்திகளின் உதவியுடன் அரசாங்கப் படையினர் இக்குண்டு வெடிப்பை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

[6ஆம் பக்கம் பார்க்க]

# தீர்வுக்கான யோசனைகளை

# பிக்குகள் முன் வைத்தனர்

## புலிகள் நாளை பதிலளிப்பர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

இப்போது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள பௌத்த குருமார் தூதுக்குழுவினர், இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக சில யோசனைகளை விடுதலைப் புலிகள் தலைவர்களிடம் முன்வைத்துள்ளனர்.

இந்த யோசனைகள் குறித்து நாளை நடக்கவிருக்கும் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகள் பதிலளிப்பர்.

தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள பௌத்த குருமார் தூதுக்குழுவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நேற்றுக் காலை நடைபெற்றன.

இப்பேச்சுக்கள் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் நீடித்தன.

இனப் பிரச்சினைக்குச் சமாதானமான முறையில் அரசியல் தீர்வு காணப்படுவதையே தாம் விரும்புவதாகத் தெரிவித்து பௌத்த குருமார், தமது யோசனைகள் சிலவற்றை விடுதலைப் புலிகள் தலைவர்களிடம் முன் வைத்தனர்.

இந்த யோசனைகளைப் பரிசீலனை செய்த பின்னர் தமது நிலைப்பாடு என்ன என்பதை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மேதின ஊர்வலத்துக்கு ஏற்பாடுகள் துரிதம்

யாழ்ப்பாணம். ஏப். 24

குடாநாட்டில் மேதின ஊர்வலத்தை வெகு எழுச்சியுடன் நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

ஊர்வலப் பாதையில் பல இடங்களிலும் பந்தல்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. குடாநாட்டில் மேதின அழைப்பு சுவரொட்டிகளும், பதாகைகளும் காணப்படுகின்றன.

இம்முறை மதம்சார் அமைப்புகளும் ஊர்வலத்தில் கலந்து கொள்கின்றன.

தொழிலாளர் இனமானிய மேதினத்தை ஒடுக்கப்படும் மக்களது தேசிய எழுச்சி நாளாகவும், விடுதலைக்கான அறைகூவல் நாளாகவும் முன்னெடுப்பதற்கான சகல ஏற்பாடுகளும் விறுவிறுப்புடன் நடைபெற்று வருகின்றன.

மேலும் சனசமூகநிலையங்கள், கிராமிய அபிவிருத்தி நிறுவனங்கள், மகளிர் அமைப்புக்கள் தேசிய உணர்வுகளை ஊர்திகளில் வடிவமைத்து வருகின்றன. [ஓ]

## யுத்தக் கைதிகளை இன்று சந்திப்பதற்கு ஏற்பாடு

விடுதலைப் புலிகள் காவலில் உள்ள யுத்தக் கைதிகளை இன்று பிக்குமார் சந்திக்க உள்ளனர்.

தென்பகுதியிலிருந்து வந்த தூதுக்குழு ஒன்று யுத்தக் கைதிகளைச் சந்திப்பது இதுவே முதற் தடவையாகும்.

கைதிகளின் சுக நலன்களை பிக்குமார் விசாரித்து அறிந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-3)

## சத்தியஜித்ரே காலமானார்

கல்கத்தா, ஏப். 24

பிரபல இந்திய திரைப்பட இயக்குநர் சத்தியஜித்ரே தனது 70 ஆவது வயதில் நேற்றுப் பிற்பகல் கல்கத்தாவில் காலமானார். அண்மையில் அவருக்கு ஒஸ்கார் விருது வழங்கப்பட்டதும் —

அவரை பாரதரத்னா விருது வழங்கிக் கௌரவிப்பது என்று இந்திய மத்திய அரசு தீர்மானித்து இருந்ததும் தெரிந்தவையே. (இ-எ)

## வடக்கே பொருள்களை எடுத்துவர

## அனுமதி வழங்கும் அதிகாரம் படை அதிகாரிகளுக்கே

கொழும்பு, ஏப். 24

வடக்கே அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வருவதற்கு அனுமதி வழங்கும் அதிகாரம் இனி படை அதிகாரிகளுக்கே வழங்கப்படும்.

கூட்டுப்படைதலைமையகத்திடம் இருந்து வந்த இந்த அதிகாரம் விரைவில் அந்த அந்த மாவட்டத்துக்கு பொறுப்பான படை அதிகாரிகளுக்கு வழங்கப்படவிருக்கிறது.

யாழ். குடாநாட்டுக்கு அனுப்பப்படும் பொருள்களில் கப்பலில் வரும் பொருள்களை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## நகரில் ஏற்பட்ட அழிவுகளை பிக்குமார் பார்வையிட்டனர்

### வடமராட்சிக்கும் சென்றனர்

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள பௌத்த குருமார், இராணுவ நடவடிக்கைகளின்போது நகரில் ஏற்பட்ட அழிவுகளை நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர்.

யாழ். நகரப் பகுதியில் அழிந்து போய்க் கிடக்கும் அரச கட்டடங்கள், கடைகள், வீடுகள் போன்றவற்றையும் கோட்டைப் பகுதி இடிபாடுகளையும் அவர்கள் கவனித்துப் பார்த்தனர்.

யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்துக்குச் சென்றபோது அங்கு நின்ற பொதுமக்களுடன் சில நிமிட நேரம் உரையாடினர்.

மாலை வடமராட்சிக்கு சென்ற பிக்குமார் வல்வெட்டித்துறையில் ஏற்பட்டிருக்கும் பேரனர்த்தங்களையும் பார்த்து அறிந்து கொண்டனர்.

பின்னர் மாவீரர் துயில் கொள்ளும் புனித இடத்தையும், தீருவிலிலுள்ள நினைவுத் தூபியையும் அவர்கள் பார்வையிட்டனர். [ஒ-3]

## ஈழ அகதிகள் பலாத்காரமாக திருப்பி அனுப்பப்படுகின்றனர்

### சட்டசபையில் பண்ருட்டி குற்றச்சாட்டு

தமிழ்நாட்டில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகள் கட்டாயப்படுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்படுகிறார்கள்.

பாட்டாளி மக்கள் கட்சி எம்.எல் ஏ. பண்ருட்டி இராமச்சந்திரன் நேற்று தமிழ் நாடு சட்டசபையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், இப்போது இலங்கையில் பதற்றமான சூழ்நிலை இருக்கிறது. அதனால் ஈழத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது பற்றி மத்திய அரசுடன் மாநில அரசு கலந்து பேசி முடிவெடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஐ. நா. அகதிகள் மன்ற உயர் ஸ்தானிகர் மூலம் இந்தியாவில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகளுக்கு நிதி உதவி பெற மத்திய அரசு மூலம் தமிழக அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்றும் திரு. இராமச்சந்திரன் வலியுறுத்தினார். [ஒ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# C. C. A.

வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

புதிய பிரிவுகள்:

**93, 94**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. உதயன் |
| கணக்கியல் | — | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | — | திரு. ரட்ணம் |
| அளவையியல் | — | திரு. சயந்தன் |
| இந்து நாகரிகம் | — | திரு. ஜோதிஸ்வரன் |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| புவியியல் | — | திரு. வேலாயுதபிள்ளை |
| அரசியல் | — | திரு. பஞ்சாட்சரம் |

ஆரம்பம்: 26 - 04 - 1992
காலை 8 மணிக்கு

[சி-2223]



## ★ விவசாய டிப்ளோமா ★

(ஒருவருட கால இலவச பயிற்சிநெறி)

**போதிக்கப்படும் பாடங்கள்**

மிருக பரிபாலனம், பயிர் வேளாண்மை, பூங்கனியியல், விவசாய மூலதத்துவங்கள், பண்ணை முகாமைத்துவம், கமப்பொறியியல் [ஆண்கள்], மனைப்பொருளியல் [பெண்கள்], ஆங்கிலம்.

**தகைமைகள்**

க.பொ.த. [சாதாரணம்] அல்லது தே.க.பொ.த. பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன், 30-05-1992 இல் வயது 16-25க்கு இடைப்பட்டிருக்க வேண்டும்.

★ உதவுதொகை வழங்கப்படும்

விருப்பமுள்ள இருபாலாரும் 25-05-1992 இற்கு முன்னதாக

அதிபர்,
**யாழ்ப்பாணக் கல்லூரி விவசாயநிறுவனம்,**
மருதனார்மடம், சுன்னாகம்

என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

[20682]



## தாதிப் பயிற்சி நெறி
## Training For Nurses

1. தாதியர்களுக்குரிய சகல பாடத்திட்டங்களும் உள்ளடக்கப்பட்டது.
2. உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு உரியது.
3. மாவீரர், போராளிகள் குடும்பத்தவர்களுக்கு இலவசக்கல்வி, இலவச தங்குமிடவசதி.

**19-04-1992 இல் ஆரம்பமாகியுள்ளது.**

அதிபர்,
**சாயி மெடிக்கல் அக்கடமி,**
இல. 6, பருத்தித்துறை வீதி,
1 ஆம் ஒழுங்கை (மக்ரவல்ஸ் அருகில்),
யாழ். நகர்.

(சி/2210)



## ஸ்ரீ ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**A/L 94 கலை, வர்த்தக**
வகுப்புகள் ஆரம்பம்: 25 - 04 - 92
(சனி) 3 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | உதயன் |
| கணக்கியல் | — | ஸ்ரீ |
| வர்த்தகமும்நிதியும் | — | தேவா |
| அளவையியல் | — | எஸ். எஸ். மனோகரன் |
| புவியியல் | — | வேலா |
| தமிழ் | — | குழந்தை |
| இந்துநாகரிகம் | — | சோதி |
| அரசியல் | — | தவம் |
| வரலாறு | — | பிள்ளை |

- நிர்வாகி

[சி/1899]


## தந்தை செல்வா நினைவுக் கூட்டம்

தந்தை செல்வாவின் பதினைந்தாவது ஆண்டு நினைவுப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலடியில் நடைபெறும்.

அன்று காலை 8 மணிக்கு தந்தை செல்வாவின் நினைவாலயத்தில் மலர் அஞ்சலி செலுத்தப்படும். மாலை அஞ்சலிக் கூட்டம் மங்கள இசையுடன் ஆரம்பமாகும் இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [த]

## வாந்திபேதி பரவுகிறது

கொழும்பையும் அதன் சுற்றுப் புறங்களையும் சேர்ந்த 159 பேர் வாந்திபேதி நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

கொழும்பு மாநகர சபைப் பகுதியில் 21 பேருக்கும், களனியில் 22 பேருக்கும், வத்தளையில் 3 பேருக்கும், ஜாஎலையில் ஒருவருக்கும் குளியாப்பிட்டியில் இருவருக்கும் வாந்திபேதி கண்டுள்ளது.

## அதிபர், ஆசிரியர்களுக்கு நாளை முதல் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 24

கோட்ட ரீதியாக அதிபர்கள்; ஆசிரியர்கள் கலந்து கொள்ளும் கூட்டங்கள் நாளை முதல் ஆரம்பமாக வுள்ளன என்று கல்விப்பணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

வடமராட்சி கல்விக் கோட்டம்—உடுப்பிட்டி, நெல்லியடி, வல்வெட்டித்துறை, கரவெட்டி, கொத்தணிகளைச் சேர்ந்தவர்களுக்கு நாளை சனி பிற்பகல் 4 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும்—

சுழிபுரம், பண்டத்தரிப்பு, இளவாலை, காரைநகர், வட்டுக்கோட்டை கொத்தணி பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு நாளை முற்பகல் 10 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும்—

அளவெட்டி, தெல்லிப்பளை, அம்பனை, காங்கேசன்துறை, மல்லாகம் கொத்தணி பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு நாளை மறுதினம் ஞாயிறு மாலை 4 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலும்—

வடமராட்சி கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த புலோலி, பருத்தித்துறை நாகர் கோவில், உடுத்துறை ஆகிய கொத்தணி பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு 27 ஆம் திகதி மாலை 4 மணிக்கு வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும்—

மருதனார்மடம் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த நவாலி, மானிப்பாய் கொத்தணிப் பிரிவினருக்கு 27 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும்—

உரும்பராய், உடுவில், வயாவிளான், ஏழாலை, சுன்னாகம் கொத்தணிப் பிரிவினருக்கு எதிர் வரும் 27 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு இணுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும்—

அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய் கொத்தணி பிரிவினருக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியிலும் கூட்டங்கள் நடைபெறும்

(ஒ-5)

## வடக்கே வந்த குருமாருக்கு தெற்கில் எதிர்ப்புக் குரல்!

கொழும்பு, ஏப். 24

பௌத்த குருமார் வடபகுதிக்கு விஜயம் செய்வதற்கு முன்னர் தெற்கில் எதிர்ப்புக் குரல்கள் எழுந்ததாக "சண்டே ரைம்ஸ்" செய்தி வெளியிட்டுள்ளது.

"ஈழம் விரோதி ஜாதிக வியாபாரய" என்ற அமைப்பு எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் —

தூதுக்குழுவினருக்கு கொலைப் பயமுறுத்தலைக் கூட அந்த அமைப்பு விடுத்திருந்ததாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [ஒ-எ]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

## முதுதத்துவமாணி தகுதிகாண் தேர்வு- 1991/92

முதுதத்துவமாணி தகுதிகாண் தேர்வுக்கான பின்வரும் பாடங்களில் பட்டப்படிப்பில் சாதாரண சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல், புவியியல், இந்து நாகரிகம், தமிழ், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம், வரலாறு, மெய்யியல், மொழியியல், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், வர்த்தகம்.

அறிவுறுத்தல்களுடன் கூடிய விண்ணப்பப் படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கலைபீடாதிபதி அலுவலகத்தில் 27-04-1992 இலிருந்து 25-05-1992 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர், பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து 10 ரூபா செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவம் பெற வரும்போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 10/ ரூபாவிற்கான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையுடன் 8/- ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டிய சுய விலாசமிடப்பட்ட தபால் உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 01-06-1992 ஆம் திகதிக்கு முன்பாக கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். 01-06-1992 இற்குப் பின்பு வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் -
பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
10-04-1992.

[சி-1946]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னம்மா செல்லத்துரை

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த திருமதி அன்னம்மா செல்லத்துரை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், வேணுகோபால் [தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்], அளவையூர் நாதஸ்வரவித்துவான் சிதம்பரநாதன், நீலாயதாட்சி, காலஞ்சென்ற மனோரஞ்சிதம், சிவகுருநாதன் [கனடா] ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-04-1992 வியாழக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் அளவெட்டியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எஸ். சிதம்பரநாதன்,
நாதஸ்வரவித்துவான்,
அளவெட்டி.

[4693]

### திருமதி ஞானம்மா பாக்கியநாதன்

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஞானம்மா பாக்கியநாதன் 22-4-1992 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலம்சென்ற திரு. C. A. பாக்கியநாதன் அவர்களின் அன்பு மனைவியும், திரு. D. A. பாக்கியநாதன் [Staff St. Thomas' College, Formerly Staff Wesley College] அவர்களின் அன்புத் தாயாரும், திருமதி S. T. பாக்கியநாதன் அவர்களின் அன்பு மாமியும், ஷேளி, நோஸின் [Chundikuli Girls' College] அவர்களின் அன்புப் பேத்தியாரும் ஆவார்.

அடக்க ஆராதனை 24-4-1992 வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொழும்புத்துறை இலங்கை பெந்தேக்கோஸ்தே சபை சேமக்காலைக்குக் கொண்டுசெல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி S.T. பாக்கியநாதன்

21, செங்குந்தா வீதி,
நல்லூர் சந்தை,
யாழ்ப்பாணம்.

(20700)

### செல்லையா பேரம்பலம்

மண்கும்பானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நல்லூர் வைமன் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்லையா பேரம்பலம் என்பவரது ஈமக்கிரியைகள் நேற்று தவிர்க்க முடியாததன் காரணமாக நடைபெறவில்லை.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்

(20705)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்குடா முகாமைச் சுற்றி சிங்களக் குடியேற்றங்கள்

மட்டக்களப்பு, ஏப். 24
மட்டக்களப்பு மாவட்டம் கல்குடாவில் அமைந்துள்ள இராணுவ முகாமைச் சுற்றி சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

அந்தப் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் பாதுகாப்புக் காரணத்தால் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றுள்ளனர்.

அவர்களது வீடுகளிலேயே சிங்களவர் குடியேற்றப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது

இதுவரை 50 குடும்பங்கள் அங்கு குடியேற்றப்பட்டுள்ளதாகவும், இந்த நடவடிக்கையை உடன் நிறுத்துமாறும் பல அமைப்புகள் ஜனாதிபதியைக் கோரியுள்ளன.

[த-3]

# மலிவு விலையில் அப்பிள், திராட்சை

இந்தியா, பாகிஸ்தான் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளில் இருந்து சுகாதார பரிசோதனைக் கட்டுப்பாடு எதுவுமின்றி அப்பிள்பழம், திராட்சை மற்றும் தோடம் பழங்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

தற்சமயம் இப்பழ வர்க்கங்கள் ஆஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு அதிக விலைக்கு விற்கப்பட்டு வருகின்றன.

## ஜி. சீ. ஈ மாணவரின் அடையாள அட்டைகள்: அதிபர்களுக்கு அறிவுறுத்து

நவாலி, ஏப். 24
ஜி. சீ. ஈ. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அடையாள அட்டை விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்கள் இனிமேல் நேரகாலத்தோடு ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும், பிரிவுச் செயலர்கள், அரசாங்க அதிபர்கள் ஆகியோருக்கு சுற்றறிக்கையொன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

சில அதிபர்கள் ஜி சீ. ஈ. சாதாரண பரீட்சை தொடங்குவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்பு விண்ணப்பங்களை சரியான முறையில் பூர்த்தி செய்யாமல் அனுப்பிவிட்டு உடனேயே அடையாள அட்டையை எம்மிடம் எதிர்பார்க்கிறார்கள்.

இதனால் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதில் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது எனவே 1989 ஜனவரி 25 ஆம் திகதி எம்மால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை உடன் கடைப்பிடிக்கவும்

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த-100]

## விசர்நாய்க்கடி மருந்து இங்கு தயாரிக்க முயற்சி!

விசர்நாய்கடி ஊசி மருந்தை இலங்கையில் தயாரிப்பதற்கான முயற்சிகளை மருத்துவ ஆராய்ச்சி நிலையம் மேற்கொண்டுள்ளது.

ஒரு குப்பி மருந்து தற்சமயம் 7,000 ரூபா செலவில் இறக்குமதி செய்யப்படுகிறது. இந்த ஊசி மருந்தை உள்ளூரில் தயாரிக்க, இங்கு கிடைக்கும் மூலப்பொருள்களைப் பயன்படுத்த ஆராய்ச்சி நிலையம் திட்டமிட்டுள்ளது.

இந்த நடவடிக்கை மூலம் பெருந்தொகை வெளிநாட்டு நாணய மாற்றை சம்பாதித்துவிட முடியும் என்றும் — மருத்துவ ஆராய்ச்சி நிலையம் அடுத்த ஆண்டுகளில் உள்ளூரில் தயாரிக்கப்பட இருக்கும் இந்த ஊசி மருந்தை ஆஸ்பத்திரிகளுக்கு விநியோகிக்க உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. [த]


94 A/L
MATHS
Mr. குணசிங்கம்
B Sc. [Hons]
ஆரம்பம்:
25-4 1992
2-00 p. m.

94 A/L
ZOOLOGY
Mr. ஈஸ்வரதாசன்
B. Sc. [Cey]
Sat /Sun. 7-30 a. m.

94 A/L
PHYSICS
Mr. ரவிந்திரநாதன்
B. Sc [Cey]
Sat./Sun. 8-30 a. m.

94 A/L
CHEMISTRY
Mr. செல்வா
B. Sc. [Hons]
Sat./Sun. 1-00 p. m.

Personal,
New Science
Centre,
Elilakam Front Lane,
Jaffna
[சி/2215]


சம்பள உயர்வு கோரி

## பல்கலை. ஆசிரியர் சங்கம் நடவடிக்கை எடுக்கும்

கொழும்பு, ஏப். 24
கணிசமான சம்பள உயர்வு தர அரசு மறுக்குமானால தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக அரசுக்கு நிர்ப்பந்தம் ஏற்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்காக யாழ். பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய ஒன்பது பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும், சம்மேளனத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களும் இன்று கொழும்பில் கூடி ஆராயத் திட்டமிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு ஒன்று வழங்கப்படும் வரை இடைக்கால அலவன்ஸ் என்ற வகையில் 60 சதவீத சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் அரசாங்கத்தைக் கோரி வருவதாக சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் நளின் டி சில்வா தெரிவித்தார்.

சம்மேளனத்தின் கோரிக்கைகள் குறித்து பேராசிரியர் நளின் டி சில்வாவின் தலைமையில் சம்மேளனத் தூதுக்குழு ஒன்று கடந்த இரண்டாம் திகதி உயர்கல்வி அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீதைச் சந்தித்துப் பேச்சுகள் நடத்தியது.

அமைச்சரிடம் இது வரை சம்மேளனத்தின் கோரிக்கைகள் குறித்து பதில் எதுவும் கிடைக்கவில்லை என்றும் பேராசிரியர் நளின் டி சில்வா சொன்னார்.

சம்பள உயர்வு வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ள அரசு முயற்சிப்பது கவலை தருகின்றது என்றும் பேராசிரியர் டி சில்வா சொன்னார்.

இது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கமிட்டி ஒன்றை நியமித்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

சம்பள உயர்வு விஷயம் குறித்து அரசுடன் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும் பேச்சுகள் நடத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

[த-எ]

## பொது சன உதவிப்பணம்

யாழ்ப்பாணம், ஏப். 24
சுன்னாகம் வடக்கு, தெற்கு, கிழக்கு மத்தி மற்றும் மேற்கு ஆகிய பிரிவுகளுக்கான ஜனவரி, பெப்ரவரி மாத பொது சன உதவிப் பண கொடுப்பனவு இன்று வெள்ளிக்கிழமை சுன்னாகம் கிழக்கு கிராமசேவகர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும்.

[த]

## குடும்ப அட்டை பதிவு மீண்டும் ஆரம்பம்

அராலி, ஏப். 24
வலி.மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் குடும்ப அட்டைகளைப் பதிவு செய்யும் வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. குடும்ப அட்டைகள் போதாமையால் இவ் வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. (த-12)


# AIKAYES அறிவித்தல்

உற்றார், உறவினர், நண்பர்களுக்கான

## வடபகுதி தனியார் உணவு விநியோகம்

எமது 20 – 03 – 1992 திகதியிட்ட பத்திரிகை அறிவித்தல் தொடர்பாக, வடமராட்சியின் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குமான விநியோகம் கீழ்வரும் விவரப்படி நடைபெறுமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தயவு செய்து வெற்றுக் கலங்கள். வெற்றுப் பைகள், அடையாள அட்டை அல்லது அத்தாட்சி சான்றிதழ் ஆகியவற்றுடன், விநியோகத்திற்கான பதிவு விண்ணப்பத்தையும் கொண்டு வரவும்.

அனுப்பி வைக்கப்பட்ட மண் எண்ணெய் கிடைக்காததால் பிறிதொரு திகதியில் விளம்பரப்படுத்தி விநியோகிக்கப்படும்.

ஏற்கனவே திட்டமிட்டபடி யாழ். நல்லூர், சாவகச்சேரி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் விநியோகம் தவிர்க்க முடியாத காரணத்தால் திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

| உ. அ. அதிபர் பிரிவு | இடம் | திகதி | நேரம் |
|---|---|---|---|
| 1. வடமராட்சி சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் | தெருமூடி மரத்தடி ''பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா நிலையம் அருகில்'', அல்வாய் கிழக்கு | 24 – 04 – 1992<br>25 – 04 – 1992 | 7-00 — 6-00<br>7-00 — 6-00 |

AIKAYES - JAFFNA,
முத்துக்கிருஷ்ணர் வீதி,
(நாகம்ஸ் சினிமா அருகே)
சுன்னாகம்.

[சி-2451]


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 23 — 12 — 1916



மறைவு: 25 — 03 — 1992

திருமதி
**ஆனந்தவல்லி சின்னத்தம்பி**
(S. S. அன்ரி)

''அம்மாச்சி'' என்றே நாம்
இதய அன்போடென்றும் உமை
விஸ்வா சித்தே அன்போடே
மிகவும் போற்ற வாழ்ந்திட்டீர்
கஸ்தூரியின் நன் மணமபோலக்
காலம்எல்லாம் புகழ் மணத்தீர்
பஸ்மீ கரமாய்ப் பூத உடல்
போயினும் எம்முள் இருப்பீரே!

அன்னாரின் அந்தியக் கிரியைகளில் கலந்து கொண்டு, உற்றுழி உதவியோர், அனுதாபம் வழங்கியோர் இன்று நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும பங்குபற்றுவோர் ஆகிய எம் அன்பிற்குரிய உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றி உரியதாகுக.

- குடும்பத்தினர்.

சபாரட்ணம் லொட்ஜ்
பலாலி வீதி
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்

(20678)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பல வர்ண Love Birds, தல்வ நிலையில் உள்ள கூடு, பன்ரம் கோழிக்குஞ்சுகள், நல்லின சணல் பால் ஆடு, விற்கப்படும். சங்கக்கடை முன்பாக, கோணியடி, கொக்குவில் மேற்கு. [20688]

அப்பியாசக் கொப்பிகள், C. R கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. மண்டேலா புத்தக சாலை, இல 2, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். அரஸ் புத்தக நிலையம், இல. 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். [20681]

## விற்பனையாகின்றன

கடந்த கால O/L, A/L வினா - விடைகள் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு. அப்பியாசக் கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. அறிவகம், 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [சி/2203]

## தவறிவிட்டது

இல. 30, 2ஆம் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள திருமதி ஜெ. நாகராசா (நா. ஜெயதேவி) என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. நேரில் அல்லது தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (சி/2217)

## இலவச திருமண சேவை

34 வயது, புனாபூசம் 4, செவ்வாய் 12, Ph. D. U. S. A. பெண் விரிவுரையாளருக்கு ஏற்ற மணமகன் தேவை. விண்ணப்பிக்கவும். நேரடிச் சந்திப்பு ஞாயிறு காலையில். து. விமலா. யாழ். நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4677]

35 வயது, அத்தம் 3, செவ்வாய் 7 பெண்ணுக்கு மணமகன் தேவை. உள்நாடு, வெளிநாடு விரும்பத்தக்கது விண்ணப்பிக்கவும். சந்திப்பு ஞாயிறு காலையில். து. விமலா. யா/ நாச்சிமார் கோவிலடி. [4681]

## பரீட்சை (ஆண்டு - 4)

ஆண்டு 4 பரீட்சை 26-4-92 ஞாயிறு மு. ப. 8 00, மு. ப. 11-00 நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [20695]

## புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக்கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் [சி/1888]

## தேவை

சகல வித உடைகளும் வெட்டித் தைக்கக் கூடிய ஆண் ரெயிலர் தேவை. நேரில் வரவும். கிறீன் சியஸ் ரெயிலறிங், மத்திய பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [20662]

கரியில் பாவிக்கும் பித்தளை பொயிலர் புதியது, பழையது தேவை. தொடர்பு கொள்ளவும் ஹோட்டல் றொலெக்ஸ், 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [20694]

## வெளிவந்து விட்டது

ஆண்டு 7, சமூகக்கல்வி துரித மீட்டலுக்கான வினா-விடை. ஆக்கம் க. சந்திரசேகரம். ஏக விநியோகஸ்தர்கள், ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம். விலை ரூபா 20/- மட்டுமே. [சி-1943]

## திருமண சேவை

வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் சகல துறைகளிலுமுள்ள ஆண்கள், பெண்களின் ஜாதகங்கள் எம்மிடம் உண்டு. விருப்பத்திற்கு ஏற்ப பொருத்தம் பார்த்து நிறைவேற்றி வைக்கப்படும். செ. விஜயரத்தினம், நவாலி கிழக்கு, மானிப்பாய். [20601]

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி

## லூட்ஸ்சியாமினா பரமநாயகம்

(பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மாணவி)

அன்னையின் மடியில்; **11-04-1981** இறைவனடியில்: **24-04-1991**

நீ மறைந்து ஆண்டு ஒன்று ஆனாலும், எங்களின் உள்ளங்களில் என்றும் நிறைந்து, நீ எங்களுடன் இருக்கிறாய் என்ற உணர்வுகளுடன் வாழ்கின்றோம். உனக்காக இறைவனிடம் மன்றாடுகின்றோம்.

அப்பா, அம்மா, சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

பற்றிமா கோவிலடி,
பண்டத்தரிப்பு.

(4692)

# A/L 94

விலங்கியல்
பிரிவு II

ஆரம்பம்: **25-04 1992** காலை 7-00

ஆசிரியர்:
**ப. நாகநாதன்**

பிரிவு I நடைபெறுகின்றது. [காலை 9-00 — 10-00 மணி]

**New Master Institute,**
**B.M.C Lane, Jaffna.**

[சி/2214]

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

## பட்டப்பின் படிப்பிற்காக பதிவு செய்தல் - 1992

(முதுகலைமாணி / கலாநிதி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1991/92 கல்வியாண்டின் பின்வரும் பாடநெறிகளுக்கு பட்டப்பின் படிப்பிற்காக தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 01-06-1992 வரை கோரப்படுகின்றன.

பொருளியல், கல்வியியல், புவியியல், இந்து நாகரிகம், அரசியல், சமஸ்கிருதம், வரலாறு, தமிழ், மெய்யியல், மொழியியல், கிறிஸ்தவ நாகரிகம், சித்தமருத்துவம், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், வர்த்தகம்.

விண்ணப்பப்படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ 27-04-1992 இலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர், பல்கலைக்கழக நிதியாளரிடம் ரூபா 10/- செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப் படிவம் பெற வரும்போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால் மூலம் பெற விரும்புவோர், நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 10/- ரூபாவிற்கான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் 8/- ரூபா பெறுமதியுள்ள முத்திரை ஒட்டி சுயவிலாசமிடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 01-06-1992 இற்கு முன்பாக கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். 01-06-1992 இற்குப் பின்பு வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப்-
பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.
20-04-1992.

[சி-2220]

# உயர்கலைச் கல்லூரி

ஆனைப்பந்தி.

## G. A. Q. 92/93 (பேராதனை)

விரிவுரைகள் (புதிய பிரிவு)

**ஆரம்பம்: 26-4-92** காலை 11-00 மணி.

மு.குறிப்பு:

★ G. A. Q. இங்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது.

★ எமது கல்லூரியில் பதிவு செய்த மாணவர்களும், புதிய மாணவர்களும் சமுகம் அளிக்கவும்.

[சி/2221]

முதலாவது

# பிறந்த நாள் வாழ்த்து



## பத்மநாதன் மோவிதன்

ஜோய் ஹவுஸ் அளவெட்டி மேற்கு, அளவெட்டியைச் சேர்ந்த பத்மநாதன் - நஞ்சனா தம்பதிகளின் செல்வப் புதல்வன் செல்வன் மோவிதன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று [24 - 04 - 1992] தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அக்கா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அமுதன் சித்தப்பா மற்றும் உறவினர்கள் பல்கலையும் கற்று, பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

[4688]

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 09 — 11 — 1920



ஆண்டவன் அடியில்: 09 — 05 — 1988

அமரர்

## நாகலிங்கம் பாலகிருஸ்ணர்

(பத்தர்)

திதி: 24 — 04 — 1992

அன்புத் தெய்வமே ஐயா!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் - உங்கள்
நினைவுகள் எங்களை விட்டு நீங்காது
உங்கள் எண்ணங்களை எமது
இலட்சியங்களாகக் கொண்டு - உங்கள்
பாதையில் உறுதியுடன் செல்வோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மணியகாரன் வீதி,
தெல்லிப்பழை.

[20671]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சுதேச விழிப்புணர்வு

வெளிநாட்டு ஆக்கிரமிப்போடு எங்கள் சொந்த உணவுகளையும், உணவுப் பழக்கங்களையும் மறந்து விட்டோம்.

மேலை நாட்டவர்கள் தங்கள் உற்பத்திகளுக்குச் சந்தை வாய்ப்புத் தேடுவதற்காக, இலகுவானவை என்றும் சுசியானவையும் என்று கூறி அறிமுகப்படுத்திய உணவு வகைகளும், நாகரீகம் என்று கூறி அறிமுகப்படுத்திய உணவுப் பழக்கங்களும் எங்கள் சமுதாயத்தை மிகவும் பாரதூரமாகப் பாதித்துள்ளன.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பல்கலைக்கழகத்தில் நேற்று நடத்திய கருத்தரங்கில், தமிழர்கள் தமது உணவுகளையும், உணவுப் பழக்கங்களையும் மாற்றியதால் பொருளாதார, சமூக, வைத்தியத் துறைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து துலக்கமாகவும் விளக்கமாகவும், விவரமாகவும் பேச்சாளர்கள் தெரிவித்தார்கள்

எங்கள் சொந்த மண்ணில் விளையும், விளையக் கூடிய ஊட்டமும் சத்தும் நிறைந்த பல உணவுகளை நாம் ஒதுக்கி விட்டோம். பாவனையைக் குறைத்து விட்டோம்.

முருங்கை இலையிலும், அகத்தியிலும், வல்லாரையிலும் மற்றும் பல உள்ளூர் இலை வகைகளிலும் உள்ள போசாக்கு மதிப்பும் சத்தும் தெரியாமல் அவற்றை விடக் குறைந்த போசாக்குள்ள 'நாகரீக" மரக்கறிகளை நாடுகிறோம்.

தவிடு நீக்காத அரிசியும் பருப்பும் தயிரும் முழு உணவாக இருக்க, பாணையும் கோதுமை மா ரொட்டியையும் நாடுகிறோம்; தேடுகிறோம்.

எங்களைச் சூழவுள்ள கடலில் வளமிருக்க தகரத்தில் அடைத்த மீனை வாங்கிச் சாப்பிட விழைகிறோம்.

இவற்றால் எமது மக்களின் சராசரி ஆரோக்கியம் நலிந்து வருகிறது, இளவயதில் முதிர்ச்சி உண்டாகிறது. பல புதிய புதிய வியாதிகளுக்கு மக்கள் ஆளாகிறார்கள். குழந்தைகள் போசாக்கின்மையால் பாதிக்கப்படுகின்றன.

எங்கள் மண்ணில் நன்றாக விளையக் கூடிய குரக்கன், வரகு போன்ற சத்துள்ள உணவுப் பயிர்களை விளைவித்தோம். ஆனால் கொழும்பில் இருந்து கோதுமை மா வந்ததும், குரக்கன் விளைவித்த விவசாயி நஷ்டமடைய நேரிடுகிறது. இப்போது கோதுமை மாவுடன் குரக்கன் மாவையும் சேர்த்துப் பாண் செய்ய வேண்டியுள்ளது!

தமிழ் மண்ணில் வாழும் மக்களின் வாழ்க்கை வளமுடையதாகவும் நலமுடையதாகவும் மாற வேண்டுமானால், தமிழ்ப் பிரதேசங்களில் பொருளாதாரம் சிறக்க வேண்டும். பொருளாதாரம் சிறக்க உற்பத்தி பெருக வேண்டும். உற்பத்தி பெருக எமது வளங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். அந்த வளங்களை இனங்காணவும் பயன்படுத்தவும் ஆய்வுகள் பரிசோதனைகள் தேவை

உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் சிறப்புகள், பயன்கள் குறித்து மக்களுக்குத் தகவல் சென்றடைய வேண்டும். உணவுப் பழக்கங்களை மாற்றுவதற்கு தூண்டப்படுவது போல உள்ளூர் உற்பத்திகளில் நாட்டங் கொள்ளும் மனப் போக்கும் வளர்க்கப்பட வேண்டும்.

மொத்தத்தில் எல்லாத்துறைகளிலும் சுதேசிய விழிப்புணர்வும், எழுச்சியும் மக்களுக்கு ஊட்டப்பட வேண்டும். அதனை நாடி எல்லாத் துறைகளையும் சேர்ந்த சமூக நலவிரும்பிகள், அறிஞர்கள் உழைக்க வேண்டும்.

சுதேசிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது என்பது உண்மையில் ஒரு சவால் தான். அதனையும் ஒருவகைப் போராட்டம் எனலாம்.

# 3 ஆயிரம் சிங்கள மக்கள் மணலாறில் குடியேற்றம்!

## அமைச்சர் வெளியிட்ட தகவல்

கொழும்பு, ஏப். 24

மணலாறு மாவட்டத்தில் அண்மைக்காலங்களில் 3 ஆயிரம் சிங்கள விவசாயிகள் குடியேற்றப்பட்டனர். ஆரம்ப காலத்தில் இம்மாவட்டத்தில் 65 விவசாயிகளே குடியேற்றப்பட்டிருந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இங்கு குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கு சகல அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதுடன், இவர்களின் பல்வேறு பிரச்சினைகளையும் கவனிக்க அமைச்சரவைக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயங்களை காணி நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தித்துறை அமைச்சர் திரு. காமினி அத்துக்கோறளையும் தென்பகுதியில் கூட்டம் ஒன்றில் பேசும் போது உறுதி செய்தார்.

மணலாறு மாவட்டம் மகாவலி அமைச்சினால் 'மகாவலி முறை எல்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் —

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்களில் இருந்து குடியேற்றவாசிகளைப் பாதுகாக்கவும், அவர்களின் தண்ணீர்ப் பிரச்சினை போக்கவும், துரித அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு ஜனாதிபதிகள் ஆலோசனையின் பேரில் அமுல் செய்யப்படுவதாகவும் அமைச்சர் மேலும் சொன்னார். [த]

## நஜிபுல்லா வெளியேற அனுமதி மறுப்பு

காபூல், ஏப். 24

பதவி கவிழ்க்கப்பட்ட டாக்டர் நஜிபுல்லா நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்க வேண்டும் என்று ஐ. நா. பிரதிநிதி விடுத்த வேண்டுகோளை, காபூல் விமான நிலையத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள முஜாஹுதீன் செரில்லா அமைப்பின் தளபதி ஜெனரல் ரஷீத் நிராகரித்து விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

போர்க் குற்றங்களுக்காக டாக்டர் நஜிபுல்லாவை விசாரிக்க வேண்டியிருப்பதாகவும் —

ஆகவே அவரை நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்க முடியாது என்றும் ஜெனரல் ரஷீத் தெரிவித்திருக்கின்றார். [ஒ எ]

## தெரிவுக்குழுவின் தீர்வை அரசாங்கம் அமுல் செய்யும்

### ஜனாதிபதி பிரேமதாஸா தகவல்

இவ்வருட இறுதிக்குள் வடக்கு — கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு சகல கட்சிகளுடனும் இணைந்து, இறுதியானதும் உறுதியானதுமான ஒரு தீர்வை முன் வைக்குமானால் அதை எனது அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் அதன் மூலம் இந்த தேவையற்ற யுத்தத்தையும் நிறுத்தும்.

ஜனாதிபதி பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டையில் புதிய நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி ஆரம்பிக்கப்பட்டு 10 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு, நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் முன்கண்டவாறு தெரிவித்தார். [த-3]

## குடும்ப பதிவு அட்டையை 28க்கு முன் பெற அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 24

புதிதாக நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள குடும்பப் பதிவு அட்டை தொடர்பான வேலைகள் யாவும் எதிர்வரும் 28 ஆம் திகதியுடன் பூர்த்திசெய்யப்படும் என்றும் —

இதுவரை தமது குடும்ப அட்டைகளைப் பூர்த்திசெய்து பெற்றுக்கொள்ளாதவர்கள் தத்தமது பகுதி கிராம சேவையாளர்களுடன் உடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறும் — அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அரச அலுவலகங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தும்போது அடுத்த மாதம் முதல் குடும்பப் பதிவு அட்டை முக்கிய ஆவணமாக அதிகாரிகளினால் கோரப்படும் என்றும் யாழ் செயலக வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளன. [ஒ-5]

## விசர்நாய்க் கடி விவகாரம்; கொழும்புக்கு அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ் மாவட்டத்தில் விசர்நாய்க் கடியால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து கொழும்பில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திடமும், 'யுனிசெப்' நிறுவனத்திடமும் அறிக்கை ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

''விசர்நாய்க் கடி கட்டுப்படுத்தல் நடவடிக்கைக் குழு''வே இந்த அறிக்கையைக் கையளித்துள்ளது.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் செயலாளர் திரு. பொ. பாலகிருஷ்ணன் இத் தகவலைத் தெரிவித்தார்.

விசர்நாய்க் கடியைத் தடுப்பது தொடர்பாகச் சில உதவிகளும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் கோரப்பட்டுள்ளன.

இதேவேளை — விசர்நாய்க் கடி பற்றி பொதுமக்களை எச்சரிக்கும் துண்டுப் பிரசுரம் ஒன்றை அரச சார்பற்ற நிறுவனங்களின் சார்பாக தமிழர் புனர் வாழ்வுக் கழகம் வெளியிட்டுள்ளது. [ஒ-5]

## பொலீஸ் காவலில் மரணமானவர் விவகாரம்:

## மீண்டும் விசாரணை நடத்த உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஏப். 24

பொலீஸ் காவலில் மரணமடைந்ததாகக் கூறப்படும் இராஜேந்திரன் என்பவர் குறித்து விசாரணை நடத்துமாறு கோயம்புத்தூர் மாவட்ட நீதிபதிக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

1989 அக்டோபரில் பல்லடம் காவல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்ட இராஜேந்திரன் கொலை செய்யப்பட்டு, அவரது உடல் மறைக்கப்பட்டதாக குற்றம் சாட்டி உயர் நீதிமன்ற சட்ட உதவிக்குழு மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தது. இதனடிப்படையில் உயர் நீதிமன்ற நீதிபதிகள் திரு. கே. எம். நடராஜன், திரு. எம். மருதமுத்து ஆகியோர் இவ்வாறு தீர்ப்பளித்துள்ளனர்.

இராஜேந்திரன் பற்றி விசாரணை நடத்துமாறு ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு வழக்கு விசாரணை இன்னும் முடியாத நிலையில் இந்த இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

இந்த விசாரணையை 12 வாரங்களுக்குள் முடித்து விடுமாறு [illegible] இந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த]

## உண்ணாவிரத போராட்டம்

சென்னை, ஏப். 24

பத்திரிகை சுதந்திரத்தை பறிக்கும் தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகளை கண்டித்து தமிழ்நாடு செய்தியாளர்கள சங்கம் நேற்று முன்தினம் ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்.

## திருமறைக் கலாமன்றம் நடத்தும் முத்தமிழ் விழா

### இன்று முதல் 3 தினங்கள் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஏப் 24

யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் வெள்ளி, பொன், பவள விழாக்களைச் சிறப்பிக்கும் முகமாக திருமறைக் கலாமன்றம் முத்தமிழ் விழா ஒன்றை நடத்துகிறது.

முத்தமிழ் விழா நிகழ்ச்சிகள் இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை வரை — மூன்று தினங்கள் யாழ். பிரதான வீதியிலுள்ள மன்ற அரங்கில் இடம் பெறும். தினமும் மாலை 5 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

உரையரங்கு, கவியரங்கு, இசையரங்கு, வழக்காடு மன்றம், நடன நாடகம், மெல்லிசை, நாடகம் போன்ற பல சுவை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இறுதி நாளான ஞாயிறன்று — யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெறும். யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை இறுதிநாள் நிகழ்ச்சியின் போது கௌரவிக்கப்பட இருக்கிறார்.

மாதாந்தம் பல்வேறுபட்ட கலை, இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்திவரும் திருமறைக் கலாமன்றம் சித்திரைமாத நிகழ்ச்சிகளின் ஓர் அங்கமாக இந்த முத்தமிழ் விழாவை ஒழுங்கு செய்துள்ளது.

இன்றைய நிகழ்ச்சிகளில் இயற்றமிழ் அரங்கில் கலாநிதி இ. பாலசுந்தரம், திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) ஆகியோர் உரையாற்றுவர். திரு. எஸ். டிவகலாலா தலைமை வகிப்பர்.

திரு இ ஜெயராஜ் நீதிபதியாகப் பணிபுரிய பாரதிக்கு முன் வந்த புலவர்களை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி வழக்காடு மன்றம் நடக்கும். வாதியாக திரு. த. சிவகுமாரனும், பிரதிவாதியாக திரு. அ. திருநந்தகுமாரும் வாதாடுவர். கலைமாணி திருமதி அன்னலட்சுமி தனபாலசிங்கத்தின் இசை நிகழ்ச்சியும், அரக்கனை வென்ற அருட்செல்வன் என்ற நாட்டிய நாடகமும் இடம் பெறும். [ஒ-3-51]

## விஞ்ஞான மாநாட்டு நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஏப் 24

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்க மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று காலை ஒன்பது மணிக்கு பேராசிரியர் எஸ். மகேஸ்வரன் தலைமையில் ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணக் கடலேரியில் உள்ள இறால்களின் தன்மை, யாழ்ப்பாணக் கிணறுகளில் படிவங்கள் ஏற்படுதல், ஆகிய விடயங்கள் உட்பட பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் அப்போது சமர்ப்பிக்கப்படும்.

பேராசிரியர் வி. நவரத்தினராசா தலைமையில் நடக்கும் இரண்டாவது அமர்வில் —

செம்மணி நெல்வயல் பிரதேசம் உவராதல், வடக்கில் கட்டட நிர்மாணக் கைத்தொழிலில் உள்ள வசதிக் குறைவுகளும் அவற்றை நிவர்த்தி செய்தலும் ஆகிய விடயங்கள் குறித்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படும்.

பேராசிரியர் செ. சிவஞான

6 ஆம் பக்கம் பார்க்க]

## வர்த்தக ஊழியர் சங்கம் புதனன்று வேலை நிறுத்தம்!

எதிர்வரும் புதன்கிழமை ஒருநாள் பொதுவேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் (CMU) திட்டமிட்டுள்ளது.

சங்கத்தின் பொதுச் செயலாளர் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஒரு நாள் பொதுவேலை நிறுத்தத்துக்கு முன்னோடியாக வேலைத் தலங்களுக்கு முன்னால், அலுவலக வேலைகள் ஆரம்பமாவதற்கு முன்னர், அல்லது அலுவலக நேரத்துக்குப் பின்னர் இலங்கை வர்த்தக ஊழியர் சங்க உறுப்பினர்கள் மறியலில் ஈடுபடுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

உறுப்பினர்களுக்கான தனது அறிவித்தல் ஒன்றில் —

ஜனநாயக உரிமைகளைப் பாதிக்கும் அவசரகாலச் சட்ட விதிகளை ரத்துச் செய்யும்படி சங்கம் அரசுக்கு அடிக்கடி கோரிக்கை விடுத்து வந்தது.

அரசமைப்பின் 155 ஆவது ஷரத்தையும் ரத்துச் செய்யும்படியும் சங்கம் கேட்டு வந்தது. நாட்டில் ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்ட இந்த நடவடிக்கைகள் அத்தியாவசியமானவை என்று சங்கத்தின் பொது உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் — என்று வர்த்தக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. அரசின் தனியார் மயப்படுத்தும் கொள்கை, அவசரகாலச் சட்ட நீடிப்பு, தொழிற்சங்க உரிமைகளை மறுத்து வருவது மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகியவற்றை எதிர்த்து மே 15 ஆம் திகதி பொதுவேலை நிறுத்தம் ஒன்றை நடத்துவது பற்றி முன்னர் தொழிற்சங்கங்களின் தலைவர்கள் ஆலோசித்து வந்தனர் [த-எ]

## காத்தான்குடியில் மீன்பிடிக்குத் தடை

கொழும்பு, ஏப். 24

காத்தான்குடிப் பகுதியில் ஆறு வாசிகளில் முஸ்லிம் மீனவர்கள் மீன்பிடிக்க பொலீஸார் தடைவிதித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் அமுலுக்கு வந்த இந்தத் தடை மறு அறிவித்தல் வரை நடைமுறையில் இருக்கும் என்றும் பொலீஸார் தெரிவித்தார். (த-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மலிவு விற்பனை

| | |
|---|---|
| செக் சேட்டிங் 44 அங். | 80/- |
| கஜா சூட்டிங் (தனிக்கலர்) லெந் | 125/- |
| L/S சேட் (HYBRITE) | 125/- |
| S/S சேட் (HYBRITE) | 120/- |
| பிஜாமா பொலிஸ்ரர் சாரம் | 115/- |
| விஸ்கோஸ் 44 அங். | 115/- |
| சலஞ்சர் L/C (தனிக்கலர்) | 50/- |

வாடிக்கையாளரின் நன்மை கருதி எமது மலிவு விற்பனை 31-05-92 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்,

(பாரதி சிலைக்கு அருகாமையில்),
156, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (20697)


# தமிழ்-சிங்களை மக்களிடையே சகோதரத்துவம் நிலவ வேண்டும்

## மகாநாயக்கர் கருத்து

யாழ்ப்பாணம், ஏப் 24
சிங்கள - தமிழ் இனங்கள் மத்தியில் சமாதானமும் ஐக்கியமும் நிலவ வேண்டும் என்பதே எமது விருப்பம்.

இப்படிக் கூறினார் யாழ்ப்பாணம் வந்துள்ள பௌத்த தூதுக்குழுவின் தலைவரும் அமரபுர நிக்கயாவின் மகாநாயக்கருமான வண. பலப்பிட்டிய சிறிசிட்டாயதிர தேரர்.

தூதுக்குழுவினருக்கும் விடுதலைப் புலிகள் தலைவர்களுக்கும் இடையில் நேற்றுக் காலை நடைபெற்ற முதற் சுற்றுப் பேச்சின்போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மகாநாயக்க தேரர் மேலும் தெரிவித்ததாவது:-

அந்நிய ஏகாதிபத்திய ஆதிக்கமும், அதனைத் தொடர்ந்து இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பாரபட்சமான நடவடிக்கைகளுமே இன்றைய இனப்பிரச்சினைக்கு காரணம்.

காலம் காலமாக சிங்கள மக்களும், தமிழ்மக்களும் ஒற்றுமையாக சகோதரர்களாக வாழ்ந்து வந்தனர். மீண்டும் ஐக்கியமும், சகோதரத்துவமும் தழைத்தோங்க வேண்டும்.

பௌத்ததத்துவம் சகோதரத்துவத்தையும், மனித நேயத்தையும் போதிக்கின்றது. பௌத்தத்தை மதமாக வரித்து வாழும் எமது குருமார் பௌத்த தர்மத்தின் படியே பிரச்சினைக்கு தீர்வு காண விரும்புகிறோம் என்றார்.

### தர்மயுத்தம்

விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அதற்குப் பதில் அளித்துப் பேசுகையில் கூறியதாவது;-

மனித அன்பையும், அறத்தையும், மனிததர்மத்தையும் ஜீவகாருண்யத்தையும் போதிக்கும் பௌத்த மதத்தை தழுவிக் கொண்ட சிங்கள தேசம் தமிழ் மக்களுக்கு எதிராக அநீதியையும், அதர்மத்தையும், மனிதாபிமானமற்ற கொடுமைகளையும் கட்டவிழ்த்து விட்டு வருவது மிகவும் வேதனைக்குரியது.

சிங்கள அரச பயங்கரவாதத்தின் எதிர் விளைவாகவே தமிழ் மக்கள் மத்தியில் ஆயுத போராட்ட வடிவம் தோற்றம் கொண்டது.

தமிழரின் போராட்டம் தர்மத்தையும், சத்தியத்தையும் அடிப்படையாகக் கொண்டது — என்றார். [அ-3]

## இன்று

தென்மராட்சி, ஏப். 24
சோரன்பற்றுப் பகுதியில் உள்ள பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணித்தாய்மார், வயோதிபர்கள் ஆகியோருக்கு போஷாக்கு உணவு வழங்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை சோரன்பற்றில் இடம் பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட சர்வோதய அமைப்பினால் போஷாக்கு உணவு வழங்கப் படவுள்ளது.

போஷாக்கு உணவு வழங்கும் திட்டம் கடந்த 4 ஆம் திகதி முதன் முதலாக இந்திரா புரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது. [இ-117]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 24
காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்கள் இன்று காலை பத்து மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கூடி மேதின ஏற்பாடுகள் குறித்துக் கலந்துரையாட உள்ளனர். [அ]

★ ★ ★

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று யாழ்ப்பாணம் பாடும் மீன் மஞ்சள் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென் அன்ரனீஸ் அணி மோதவிருக்கிறது.

இந்த ஆட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

## கொம்படி குண்டு வெடிப்பு

## மூன்று பேரின் சடலங்கள் அடையாளம்காணப்பட்டன

யாழ்ப்பாணம், ஏப். 24
கொம்படிப்பகுதியில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் இறந்தவர்களில் மூவரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.

பண்டிவிரிச்சானைச் சேர்ந்த சின்னத்தம்பி நவநீதன் (வயது 12) சின்னத்தம்பி சுகந்தன் [வயது 10] சின்னத்தம்பி சுபாஜினி (வயது 7) ஆகியோரின் சடலங்களே அடையாளம் காணப்பட்டவை ஆகும்.

மற்றும் குண்டு வெடிப்புச் சம்பவத்தின்போது காயம் அடைந்து நேற்று யாழ் போதனா வைத்தியசாலை சேர்க்கப்பட்டோர் விபரம் வருமாறு:-

செல்லத்துரை இராசதுரை [வயது 42] வெற்றிலைக் கேணி, யேசுதாஸன் கிங்ஸ்லி [வயது 15] தாளையடி, கந்தசாமித்துரை ஆனந்தவடிவேல் [வயது 37] பெரியபண்டிவிரிச்சான், தவராசா கோபாலகிருஷ்ணன் [வயது 9] பெரியபண்டிவிரிச்சான், இராசையா தர்மகுலசிங்கம் [வயது 35] தட்டுவன்கொட்டி.

அந்தோனிப்பிள்ளை அருமைத்துரை [வயது 36] இளவாலை, கைத்தாம்பிள்ளை குசைநாதர் யேசுதாஸ் [வயது 21] இளவாலை, அந்தோனி முத்து துரைசிங்கம் [வயது 54] தாழைபடி, யேசுதாஸன் ரமேஷ் [வயது 18] தாழையடி, செ வேல்முருகன் [வயது 43] உருத்திரபுரம், அரியதுரை சிவானந்தம் [வயது 21] கிளிநொச்சி, திருநாவுக்கரசு சிவசக்தி [வயது 22] நாரந்தனை.

சம்பவத்தில் பதினொரு பேர் கொல்லப்பட்டது நேற்று நள்ளிரவு வரை ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

பை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றே வெடித்திருக்கலாம் என்றும்—

இறந்தவர்கள் காயமடைந்தவர்களில் எரிகாயங்கள் மற்றும் உரசல் காயங்களே காணப்பட்டன என்றும்— தெரிவிக்கப்பட்டது. [இ-15]

## அராலியை நோக்கி மீண்டும் ஷெல்

யாழ்ப்பாணம், ஏப். 24
அராலியை நோக்கி மீண்டும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

நேற்று அதிகாலை 2-45 மணியளவில் மண்டைதீவுப் பகுதியில் இருந்து ஏழு ஷெல்கள் அராலி கிழக்கு ஐயனார் கோவிலடிப் பகுதியை நோக்கி ஏவப்பட்டன. இந்த ஷெல்கள் கடற்கரைப் பகுதிகளிலேயே விழுந்து வெடித்ததினால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன இச்சம்பவத்தின்போது வள்ளம் ஒன்று சேதமடைந்தது. வலையை எடுக்கச்சென்ற மீனவர் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பினார். [இ-15]

## விமானம் மூலம் திங்களன்று அகதிகள்

இந்தியாவிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளை திருமலைக்கு விமானம் மூலம் கொண்டுவருவது இம்மாதம் 27ஆம் திகதி [திங்கட்கிழமை] ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்படுகிறது.

## தீர்வுக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
நாளை சனிக்கிழமை நடக்கும் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்களின்போது தெரிவிப்பதாக விடுதலைப் புலிகள் தலைவர்கள் கூறியுள்ளனர்.

நேற்று நடந்த முதற் சுற்றுப் பேச்சுக்களில் விடுதலைப்புலிகள் சார்பில் பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா), மூத்த உறுப்பினர் திரு இளங்குமரன். அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் பிரமுகர்களான திரு. யோகரத்தினம் யோகி, திரு. வே பாலகுமாரன், பரதன், ரவி, யாழ். மாவட்ட அரசியல நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, யாழ். மாவட்ட தளபதி செல்வராசா, மகளிர் முன்னணி பொறுப்பாளர் செல்வி ஜெயா, திருமதி அடல் பாலசிங்கம் ஆகியோர் பங்குபற்றினர். [அ 3]

## விஞ்ஞான...

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]
சுந்தரம் தலைமையில் நடைபெறும் மூன்றாவது அமர்வில்—

வாலிபப் பருவத்தில் ஏற்படும் இரத்த அமுக்கம், புகையிலைத் தூசியினால் சுவாசப்பையில் ஏற்படும் பாதிப்பு, நீண்ட தூரம் சைக்கிள் ஓடுவதால் சுவாசப்பை செயற்பாடு பாதிக்கப்படுதல் ஆகிய விடயங்கள் குறித்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப் படும். [அ]

## அனுமதி...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)
அனுமதிப்பதற்கு கடற்படையும், தரைமார்க்கமாக வரும் பொருள்களை அனுமதிப்பதற்கு வவுனியா இராணுவ அதிகாரியும் பொறுப்பாக இருப்பார்கள் என அறியவருகிறது. (இ-3)

## கொம்படியில் குண்டு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
பல இடங்களிலிருந்து வந்தவர்கள் கூடியிருந்த இடத்தில் குண்டு வெடித்ததாலும்—

குண்டு வெடிப்பால் பலரின் உடல் சிதறிப்போனதாலும்—

சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை உடனடியாக சரிவரப் பெற்றுக் கொள்ளமுடியவில்லை.

இச்சம்பவத்தில் காயமுற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு விரைந்து எடுத்துவரப்பட்டவர்கள் தெரிவித்த தகவலின்படி குறைந்தது 15 பேர் உயிரிழந்திருக்கக் கூடும் என அஞ்சப்பட்டது.

உயிரிழந்த பலரின் சடலங்கள் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை.

நண்பகலுக்கு சற்று முன்னர் அல்லது நண்பகலுக்கு சற்றுப் பின்னரே மேற்படி சம்பவம் நடந்த பகுதியை கொழும்பு—யாழ். பயணிகள் தாண்டிச் செல்வது வழக்கம்.

சம்பவம் நண்பகல் வேளையில் நடந்ததால் பெரும்பாலும் கொழும்பு—யாழ். பயணிகள் அதில் சிக்கியிருக்கமாட்டார்கள் என்று கருதப்பட்டது.

கொம்படிப் பாதையில் படகுச் சேவையில் ஈடுபடும் படகோட்டிகளும், சைக்கிள் வியாபாரிகளும், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளுக்குச் செல்லும் பயணிகளும், கொம்படிப் பகுதியைச் சேர்ந்தவர்களுமே அநேகர் இச்சம்பவத்தில் சிக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குண்டு வெடித்த பகுதியில் சற்று நேரம் கழித்து மீண்டும் ஒரு குண்டு வெடித்ததாகவும்—

அப்பகுதியில் பெரும் புகை மண்டலம் காணப்பட்டதாகவும் தெரியவந்தது. [உ-3-15]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி மகேஸ்வரி சந்திரபாலன்

தோற்றம்: 29-08-1952 மறைவு: 25-03-1992


இவரின் ஆன்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்.

கணவன் சந்திரபாலன்,
பிள்ளைகள் சங்கிதா, சாமந்தி, சாலினி.

செம்பியன் ஒழுங்கை,
கொக்குவில். (20684)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 02 | 24 |
| 04 | 04 |
| 1963 | 1989 |



### கப்டன் ரங்கன்
(துரைசிங்கம் ஜெயரங்கன்)

வீட்டுக் குழைக்கவெனப் பிறந்தநீ — ஈழ
நாட்டுக்காய் இன்னுயிரை ஈந்தாயே
ஓட்டிடுவோம் அந்நியனை என்றுழைத்து — மன
ஓர்மமுடன் போரிட்ட எம்ரங்கா!
வாட்டுதடா உன்பிரிவு எம்மவரை — இன்றோடு
போட்டுதடா மூன்றாண்டு, நெஞ்சுநிறை
ஊட்டமென நிற்பாயே உறுதுணையாய்.

அம்மா, சகோதர சகோதரிகள்,
உறவினர், நண்பர்கள்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு. (20704)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்( பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24 - 4 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org